**Date: 12.06.2026**

**MCOP. No. 81/2018**

**PW.1: ரஞ்சித்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கபடுகிறார்.**

**2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து சமயத்தில் நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். வாகனத்தின் நம்பர்எனக்கு ஞபாகமில்லை. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் 3 நபர்களாக சென்றோம் என்றால் சரிதான். 3 நபர்களில் நான் 3 வது நபராக அமர்ந்து சென்றேன். மேற்படி வாகனம் என்னுடைய நண்பர் அய்யனாருக்கு சொந்தமானது ஆகும். அய்யனார் தான் வாகனத்தை ஓட்டினார். அய்யனாருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இருசக்கர வாகனத்தை அய்யனார் தான் வேகமாக ஓட்டி பாலத்தில் தடுப்பு சுவற்றி மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரிதான். நான்குறிப்பிடுவது தவறு என்றும் அய்யனார் வாகத்தை கவனமாக ஓட்டிச்சென்றார் என்றும் நான் தான் 3 ம் நபராக வாகனத்தில் கவனக்குறைவாக அமர்ந்து விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. காப்பீட்டு விதிகளுக்கு முரணாக அய்யனார் வாகனத்தை செலுத்தியுள்ளார் என்றும் விதிகளுக்கு மீறி 3 நபர்கள் சென்றுள்ளோம் என்றும், மேலும் அய்யனார் உரிமையாளர் மற்றும் ஓட்டுநராகவும் இருந்து விபத்தை ஏற்படுத்தியதால் விபத்திற்கான நஷ்ட ஈட்டை காப்பீட்டு நிறுவனம் கொடுப்பதற்கு கடமை பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் பின் இருக்கையாளர்களை 3 ம் நபராக ( Second Pillionrider ) சென்றா காணரத்தினால் எனக்கு இழப்பீடு பெறுவதற்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். நான் முதலில் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சைக்குசென்றேன் பின்னிட்டுமதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

Acewe

அதன் பிறகு மியாட் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டேன். எந்த தேதியில் மியாட் மருத்துமனையில் அனுமதிக்கபட்டேன் என்றால் 15.07.2017 முதல் 19.07.2017 வரை உள்நோயாளியாக மியாட் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டேன். என்னுடைய இடது கால் முட்டிக்கு கீழ் நீக்கப்பட்டு செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளது. நான் குறிப்பிடுவது தவறு என்றும் மேற்படி ஆவணம் 7 ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது மருத்துவமனை செலவுகள் எவ்வளவு என்றால் ஞபாகமில்லை. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் கோரியுள்ள மருத்து வசெலவுகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேறப்டி காயத்திற்கு சிகிச்சை அளிக்கும் அனைத்தும் வசதிகளும் அரசு மருத்துவமனையில் உள்ளது என்றால் அங்கு சிகிச்சை செய்யாமல் பரிந்துரைத்த காரணத்தினால் தான் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. காப்பீடு விதி மீறல் உள்ளதால் 2 ம் எதிர் மனுதாரர் இழப்பீடு செலுத்துவதற்கு கடமை பட்டவர் அல்ல என்றும் 1 ம் எதிர் மனுதாரர் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(S/d. S.Mohana Ramya.,)

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**

Adopew